கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30



# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com

ஞானம் 6 – ஒலி 05 | 29-01-2023



# கடவுள் பாதி மிருகம் மீதி



# எதிரும் புதிரும் சின்னாபின்னமாக்கும்... சிதைக்கும் சீரழிக்கும்...



**தலையங்கம்**

அருட்பணி. சைமன் பீட்டர்

உயிர்களின் மீது உயிராய் இருக்கும் மீட்பர் இயேசுவின் அற்புத நாமத்தில் உங்களுக்கு என் அன்பான வணக்கங்களும் வாழ்த்துக்களும்.

மூச்சு கொண்ட அனைத்தையும் படைத்துக் காக்கும் அவரின்றி எதுவும் ஒரு நொடிப் பொழுதும் வாழ முடியாது. அவரின் பேரிரக்கமே உயிர்களின் மூலாதாரமாகும்.

மனிதனின் பாவத்தைச் சகிக்கும் ஓர் உயிர் இருக்குமென்றால் அது பொறுமையின் ஊற்றான அந்தக் கடவுள் ஒருவரே.

துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்ற சிந்தாந்ததை விதைக்கும் இந்த உலகு அந்த இறைவனுக்கு நேர் எதிராயிருக்கின்றது.

புனித அருளப்பர் எழுதிய நற்செய்தியில் 8-ம் அதிகாரத்தில், விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணைக் கல்லால் எறிந்து கொல்ல மேசேயின் சட்டம் சொல்கிறது. அதற்கு உம் பதிலென்ன என்றபோது கருணைப் பகவான் இயேசு பெருமான், பாவமில்லாதவன் பாவத்தைப் பற்றிப் பேசவும், பாவியைத் தீர்ப்பிடவும், தண்டிக்கவும் எவனுக்கும் தகுதியே இல்லை, யார் பரிசுத்தவானோ அவர்கள் அவள்மீது கல்லால் எறியட்டும் என்று சொன்ன அடுத்த நொடி, அந்த அயோக்கிய சிகாமணிகள் துண்டக் காணோம் துணியக் காணோம் என்று எல்லா திசைகளையும் நோக்கி தூசாய் பறந்து மறைந்து விட்டார்கள்.

உன் எதிரிகள் உன்னை நோக்கி ஒரு பக்கம் வந்தால், கடவுள் உனக்குத் துணையிருக்கும்போது, அவர்கள் எல்லா எட்டு திசையிலும் பறந்து ஓடிவிடுவார்கள் என்று நமக்கு திருவிவிலியம நம்பிக்கை விதைகளை விதைக்கின்றது.

மனிதன் எப்போதும் தான்மட்டுமே நல்லவன், யோக்கியன், ஆனால் தன்னைத்தவிர எல்லாரும் பாவிகள், இரட்சிக்கப்படவில்லை என்று மார்தட்டிக் கொள்வான். அப்படி யாராவது சொன்னால் அவர்கள் தங்களின் இழிநிலையை மறைக்கின்றார்கள் என்று அர்த்தம்.

ஒருவன் பச்சை முட்டையை உடைத்து குடித்துவிட்டு தேகப்பயிற்சி செய்யப் போனான். அந்த முட்டையை குடித்தபோது அவனது மீசையில் கொஞ்சம் முட்டை ஒட்டியிருந்ததாம். வாயைச் சரியாகத் துடைக்கவில்லை.

நேரம் ஆக ஆக, அவனது மீசையில் ஒட்டியிருந்த முட்டையின் துர்நாற்றம் அவனது மூக்கைத் துளைத்தது. அவன் அருகில் இருப்பவர்களைப் பார்த்து, இடத்தைச் சுத்தமாக வையுங்க. பாரு, ஒரே அழுகுன முட்ட வாசம் வீசிக்கிட்டே இருக்குது என்றானாம். தனது அன்றைய தேகப் பயிற்சியை முடித்துவிட்டு டீ சாப்பிட கடைக்குச் சென்றபோது, அப்போது அங்கேயும் முட்ட வாசம் அடித்தது. என்னங்க டீக்கடைக்காரரே, கடைய சுத்தமா வையுங்க. இங்கே அழுகுன முட்ட வாசம் வருது என்றானாம். பிறகு வீட்டுக்குப் போய், தன் மனைவியிடம், வீட்ட சுத்தமா வைக்கப்பாரு, ஒரே அழுகுன முட்ட வாசம் அடிக்குது பாரு என்று கோபத்தோடு சத்தம் போட்டான். அப்போது அவரின்

மனைவி, இங்க வீடெல்லாம் ரொம்ப சுத்தபத்தமாத்தான் இருக்கு... கண்ணாடியில போய் உங்க மூஞ்சியப் பாருங்க, உங்க மூக்குக் கீழே, மீசையில கொஞ்சமா முட்டை ஒட்டிக்கிட்டு இருக்கு அந்த கெட்ட வாசம் உங்க மீசையிலிருந்துதான் வருது... போய் மொகத்த முழுசா கழுவுங்க என்றாராம்.

அவர் தன் தலையில அடிச்சுக்கிட்டு குளியலறைக்கு ஓடிப்போய்ட்டாராம்.

யஸர் பிறரைக் குற்றம் சுமத்திக்கிட்டே இருக்காங்களோ, அவங்க தன்னையறியாமல். தான் குற்றமுள்ளவர்கள், தவறான, பாவப் பழக்க வழக்கமுள்ளவர்கள் என்பதை மறைமுகமாக தங்களை அறியாமல் உலகுக்குப் பறைசாற்றுகின்றார்கள்.

உண்மையில் தங்களின் பாவத்தை உணர்பவர்களைத்தான் ஆயக்காரர்கள், இறைவன் முன்னால் நிற்கவும், அவரின் இரக்கத்தைப் பெறுவதற்குரிய தகுதியும படைத்தவர்கள் என்று இயேசு பெருமான் கூறுகின்றார்.

அந்த இரக்கப் பிரபுவிடமிருந்து வாழ்வின் பாதையைக் கற்றுக் கொண்ட விவேகானந்தரிடம் அவரது ஆசிரமத்தில் வாழ்ந்த ஒருவர் கோபமாக வந்து, அவரிடம், குருவே, என் அறையில் தங்கி இருப்பவர் சதாகாலமும் புகை பிடித்துக் கொண்டேயிருக்கின்றார். அதனால், அவர் அந்த இடத்தையே அசுத்தப்படுத்துகின்றார். எனக்கு மிகவும் தொந்தரவாக இருக்கின்றது. உடனே அவனை இந்த ஆசிரமத்திலிருந்து வெளியே அனுப்பி விடுங்கள் என்றாராம்.

அதற்கு விவேகானந்தர். ஓ, அப்படியா, அவரை நான் வெளியே அனுப்ப முடியாது. வேண்டுமானால், நீ கேட்டுக் கொண்டதால், உனக்கு வேறு ஓர் அறையைத் தருகின்றேன். நீ அங்கு தங்கிக்கொள் என்று கூறிவிட்டு.

நீ சொல்வது போல, புகைப்பிடிப்பது உயிரைக் கொல்லும் நோயும், பாவமும் தான். அவர் செய்து தவறுதான். அவர் புகைப்பிடித்து அவரின் உடலைக் கெடுப்பதோடு, பிறரையும், கொஞ்சம் கொஞ்சமாக கொல்லுவது அதைவிடப் பாவம்தான்.

ஆனால், நீ ஒன்றை இப்போது புரிந்து கொள்ள வேண்டும். அவர் தனது உடலைக் கெடுக்கின்றார். நீயோ உன் கோபம், பழிவாங்கும் வெறி, பகை போன்ற உணர்ச்சிகளால் உன் மனதையும், ஆன்மாவையும் அசுத்தப்படுத்துகின்றாயே அது அதைவிட பாவமல்லவா? முதலில் இந்தத் தீய குணத்தைத் தவிர்த்து உன் ஆன்மாவைக் காத்துக் கொள் என்று சொன்னாராம்.

அகழ்வாரைத் தாங்கும் நிலமும் அந்த இறையுணர்வைத்தான் கற்றுத் தருகின்றது.

பூட்டு, மதில்சுவர், நிலப்பட்டா, கத்தி, அரிவாள், கார் ரிமோட், நாய், துப்பாக்கி, பீரங்கி, போர் விமானம், போர்க் கப்பல்கள்,

சிஸடிவி கேமரா, செக்யூரிட்டி, வாட்ச் மேன்... இவையெல்லாமே, சகமனிதனின் மீதான நம்பிக்கைச் சிதைவையே காட்டுக்கின்றது. யாரும் யாரையும் நம்புவதில்லை.

ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு ரொம்ப நல்லவர்களே இரை. எமாந்து போகின்றவர்கள், சக மனிதர்களின் மீதான நம்பிக்கையை இழக்கின்றாரகள்.

அவன் ரொம்ப யோக்கியமானவன், ஆனால் சொம்பத் தூக்கி ஒழிச்சு வை என்ற எதார்த்த புத்திதான் மனிதனின் சகமனிதப் பயமாக உள்ளது.

நல்லவர்கள் நாலும் தெரிந்தவர்கள். அவர்கள் எந்த வம்பு தும்புக்கும் போகாதவர்கள். தங்களது குறைகளை அறிந்து. தங்களைத் தகுதிப்படுத்த எந்த நிலைக்கும் போவர்கள். அவர்கள் பிறரின் தகுதியின்மையை பரிவோடு பார்ப்பார்கள், தங்களால் ஆன வகையில் அதைச் சரிசெய்ய முயல்வார்கள்.

அதுவே அவர்களின் ஆன்மீக நிலையைக் காட்டும் கண்ணாடி.

தில்லாலங்கடி வேலை செய்பவர்கள்தான் எல்லோரையும் திட்டிக் கொண்டேயிருப்பார்கள். குற்றம் கண்டுபிடித்தே பேர் வாங்குபவர்களாய் இருப்பார்கள்.

ஒருவர் பிறரைப்பற்றி எந்தக் குறைகளை சொல்கிறார்களோ, பரப்புகிறார்களோ, அந்தப் பாவத்தில் அவர் கை தேர்ந்தவராய் இருக்கிறார் என்பதை அவரறியாமல் நமக்கு செய்தி சொல்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

பொதுவாகவே, தன்னில் அமைதியற்றவர்களே, பிறரை விமர்சிப்பார்கள். பிறரைப் பற்றி அவதூறு பரப்புவார்கள்.

ஆனால் இறைமனிதர்கள் அனைவரும், பிறரன்பின் மேன்மையைத்தான் உயர்த்திப் பிடிப்பார்கள்.

பிறரன்பு ஒன்றே மானிடத்தின் மாண்புக்கு வழி வகுக்கும்.

உண்மையான, முழுமையான அன்புக்கு ஆதாரம் இயேசு பெருமான் என்பதைத்தான் திருவிவிலியம் நற்செய்தியாக நமக்குக் கொடுத்திருக்கின்றது.

அவர் ஒருவர் மட்டுமே, பாவியின் மீது பரிவும், பாசமும் கொண்டு அவர்கள் சார்பாக நிற்பவர், பரிந்து பேசுபவர், அவர்களுக்காகத் தன் உயிரையும் கொடுத்தவர். நமக்காகவே மனித இனத்தின் பாவம் முழுவதையும் தன்மேல் ஏற்றுக் கொண்ட பரிசுத்தர், பாவத்தை அழிப்பதற்காக பாவத்தை தன்னோடு சேர்த்துச் சிலுவையில் அழித்தவர் அவர். ஆகவேதான் 24 மணிநேரமும் இடைவிடாது அவர் அறிவிக்கப்படுகின்றார், ஆராதிக்கப்படுகினறார்.

இயேசுவைத் தவிர வேறு எவரும் இவ்வாறு மகிமைப்படுத்தப்படுபவர் யாருமில்லை. இயேசுவின் நாமம் வாழ்க. போற்றப்படுக.

அன்பைக் கொண்டாடுபவர்கள் அனைவரும் இயேசுவையேக் கொண்டாடுகின்றார்கள்.



# விவிலியம் அறிவோம்-75



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## பொற்கன்றுக் குட்டியும் உடைக்கப்பட்ட உடன்படிக்கையும்; (வி.ப. 32-34)

சீனாய் மலையில் கடவுள் மோசேயுடன் பேசுகிறார். இஸ்ரயேல் மக்கள் கடவுளை எவ்வாறு வழிபடவேண்டும் என்பதை அவர் மோசேயிடம் எடுத்துரைக்கிறார். மோசே கடவுளுடன் இருந்த நேரத்தில் இஸ்ரயேல் மக்கள் மலையின் அடிவாரத்தில் மோசேக்காக காத்திருக்கிறார்கள். மோசே மலைக்குச் சென்று நாற்பது நாள்கள் கடந்துவிட்டன. மோசேயைக் காணாததால் மக்கள் பொறுமையிழந்தவர்களாக இருக்கிறார்கள். மோசே இனி வரமாட்டார் என்ற மனநிலைக்கு அவர்கள் வந்துவிட்டனர். எகிப்திலிருந்து அவர்களை மீட்டு வந்த மோசே கடவுள் அவர்களோடு உடன்படிக்கை செய்வதற்கு நடுநிலையாளராக இருந்து செயல்பட்டார். உடன்படிக்கைக் சடங்குகள் முடிந்தபின் உடன்படிக்கை விதிகளை கடவுளிடமிருந்து வாங்கச் சென்றவரை இதுவரைக் காணவில்லை. இஸ்ரயேல் மக்கள் இனி தங்கள் பயணத்தைத் தொடரவேண்டும்; வாக்களிப்பட்ட கானான் நாட்டிற்குச் செல்ல வேண்டும். பயணத்தைத் தொடர்வதற்கு கடவுளின் அனுமதி தேவை. கடவுளின் அனுமதி பெறுவதற்கு கடவுளுக்குப் பலிகள் செலுத்தி மக்கள் அவரைத் தொழவேண்டும். இதுவரை அவர்களை வழிநடத்தி வந்த மோசே இருந்தால் அனைத்தையும் அவரே பார்த்துக்கொள்வார். எனவே மக்கள் மோசேக்கு அடுத்த நிலையில் மக்களின் தலைவராக இருந்த ஆரோனிடம் வருகின்றார்கள். தங்களை வழிநடத்த தெய்வங்களை உருவாக்கிக் கொடும் எனக் (விப 32:1) கேட்கிறார்கள்.

மக்கள் கூட்டமாக வந்து கேட்பதால் ஆரோனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை; மக்களின் விருப்பத்திற்கு இணங்குகிறார். அவர்களிடமிருந்த பொன்னால் செய்யப்பட்ட காதணிகளை வாங்கி அவற்றை உருக்கி ஒரு வார்ப்புக் கன்றுக்குட்டியைச் செய்கின்றார். எகிப்திய கடவுளான அபிஸ் மற்றும் கனானியக் கடவுளான எல் ஆகியோர் கன்றுக்குட்டி மற்றும் காளை வடிவங்களில் வழிபடப்பட்டார்கள். இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து வந்துகொண்டிருந்ததால் அபிஸ் தெய்வத்தின் நினைவாக இந்தப் பொற்கன்றுக்குட்டி செய்யப்பட்டிருக்கலாம். ஆரோனால் செய்யப்பட்ட வார்ப்புக் கன்றுக்குட்டியை அவர்கள் கடவுளாகத் தொழுகிறார்கள். இஸ்ரயேலே! உன்னை எகிப்து நாட்டினின்று நடத்தி வந்த உன் தெய்வங்கள் இவையே என ஆரோன் அவர்களுக்குக் கூறுகிறார். மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொற்கன்றுக்குட்டியை வழிபடுகின்றனர். எரிபலிகளையும் நல்லுறவுப் பலிகளையும் செலுத்துகின்றனர். அதன்பின் அமர்ந்து உண்டு குடிக்கின்றனர். எழுந்து மகிழ்ந்து ஆடுகின்றனர் (விப 32:6). மக்களின் பிரமாணிக்கமின்மையை ஆண்டவர் பார்க்கிறார். உடன்படிக்கைச் சடங்கு முடிந்து நாற்பது நாள்கள்தான் ஆகின்றது. அதற்குள் ஆண்டவரை மறந்துவிட்டதை எண்ணி கோபம் கொள்கிறார். இஸ்ரயேல் மக்களை அழித்தொழிக்கத் திட்டமிடுகிறார். ஆண்டவர் மோசேயிடம், இப்போது என்னை விட்டுவிடு. அவர்கள்மேல் என் கோபக்கனல் மூண்டிருப்பதால் நான் அவர்களை அழித்தொழிக்கப் போகிறேன் உன்னையோ பேரினமாக்குவேன் (விப 32:10) எனக் கூறுகின்றார்.

கடவுளின் இந்தத் தீர்ப்பு கடுமையானதாகத் தெரியலாம்; இரக்கமற்றச் செயலாகத் தெரியலாம். கடவுள் இங்கே எதையும் கண்மூடித்தனமாகவோ, பழிவாங்கும் நோக்குடனோ செய்யவில்லை என்பதை நாம் உணர வேண்டும். உடன்படிக்கை விதிகளின்படியே ஆண்டவர் அனைத்தையும் செய்கின்றார். உடன்படிக்கைச் சடங்கின்போது, ஆண்டவர் கூறிய அனைத்தையும் நாங்கள் செயல்படுத்திக் கீழ்ப்படிந்திருப்போம் என இரண்டுமுறை இஸ்ரயேல் மக்கள் கடவுளுக்கு வாக்கு கொடுத்தனர். மக்களைத் தண்டிக்கப் போவதாக கடவுள் கொடுத்த எச்சரிக்கை மோசேக்கு மக்களுக்காக வேண்டுதல் புரிய ஒரு வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கிறது. மோசே மக்களுக்காக வேண்டுதல் புரிகிறார். கடவுள் தனது எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என வேண்டுகிறார். மக்களின் பாவங்களை மன்னிப்பதற்காகத் தனது உயிரையும் தருவதற்குத் தயாராக இருக்கிறார் (விப 32:11-14, 30-34). தனது வேண்டுதலில் கடவுள் இஸ்ரயேலின் மூதாதையர்களுடன் செய்த உடன்படிக்கையை நினைவு கூர வேண்டுகிறார்: உம் அடியாராகிய ஆபிரகாமையும், இஸ்ரயேலையும் நினைந்தருளும். நான் உன் வழி மரபினரை விண்மீன்கள் போல் பெருகச் செய்வேன். நான் வாக்களித்த இந்நாடு முழுவதையும் உன் வழிமரபினருக்கு அளிப்பேன்; அவர்கள் அதை என்றென்றும் உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர் என்று நீராகவே அவர்களுக்கு ஆணையிட்டு அறிவித்துள்ளீரே என ஆண்டவருக்கு அவர் செய்த உடன்படிக்கையை நினைவூட்டுகின்றார் (விப 32:13). மோசே நினைவுபடுத்துகின்ற இந்த உடன்படிக்கை ஆபிரகாம் தனது மகனான இஸ்மயேலை பலியிடுவதற்காக மலைக்குக் கூட்டிச் சென்றபோது அண்டவர் ஆபிரகாமிடம் ஆணையிட்டுக் கூறிய வார்த்தைகள். ஆண்டவர் பல நேரங்களில் இஸ்ரயேலின் மூதாதையர்களுக்கு வாக்குறுதிகள் கொடுத்தாலும் இந்த ஒரு இடத்தில் மட்டுமே. ஆண்டவர் ஆபிரகாமிடம் கீழ்க்கண்டவாறு கூறுகிறார். ஆண்டவர் கூறுவது இதுவே! நான் என்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். உன் ஒரே மகனை எனக்குப் பலியிடத் தயங்காமல் நீ இவ்வாறு செய்தாய். ஆதலால் நான் உன்மீது உண்மையாகவே ஆசி பொழிந்து விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் வழிமரபைப் பலுகிப் பெருகச் செய்வேன். உன் வழிமரபினர் தம் பகைவர்களின் வாயிலை உரிமையாக்கிக் கொள்வர். மேலும், நீ என் குரலுக்குச் செவிகொடுத்ததனால் உலகின் அனைத்து இனத்தவரும் உன் வழிமரபின் மூலம் தங்களுக்கு ஆசி கூறிக்கொள்வர் (தொநூ 22:15-18) என்கின்றார். மோசேயின் வேண்டுதலைக் கேட்கும் கடவுள் தனது எண்ணத்தை மாற்றிக்கொள்கின்றார். மக்களை அவர் தண்டிக்கவில்லை.

மக்களின் பிரமாணிக்கமின்மையைக் கண்ட மோசேயும் அவர்கள்மீது கோபம் கொள்கின்றார். மலையடிவாரத்தில் ஒரு குழப்பமான சூழல் நிலவுகிறது. பிற இனத்தவர் அவர்களின் கடவுள்களைத் தொழுகின்றபோது செய்யப்படுகின்ற செயல்கள் இங்கேயும் செய்யப்படுவதை மோசே கவனிக்கின்றார். மக்கள் யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லை. தங்கள் விருப்பம்போல் செயல்படுகின்றனர். கோபத்தை வெளிப்படுத்தும் விதத்தில் மோசே இரண்டு காரியங்களைச் செய்கின்றார். முதலாவது, மோசே மலையில் கடவுளிடமிருந்து பெற்றுவந்த பத்துக் கட்டளைகள் அடங்கிய கற்பலகைகளை கீழே எறிந்து உடைக்கிறார். கற்பலகைகள் உடைக்கப்படுவது உடன்படிக்கை உடைபட்டு விட்டதன் அடையாளமாக உள்ளது. இரண்டாவது, அவர்கள் செய்து வைத்திருந்த கன்றுக்குட்டியை எடுத்து நெருப்பில் சுட்டெரித்து மிருதுவான பொடியாகும் மட்டும் அதை இடித்துத் தண்ணீரில் தூவி, இஸ்ரயேல் மக்களைக் குடிக்கச் செய்கிறார். (விப 32:15-20). அதன்பின் மோசே லேவியர்களைத் தன்பக்கம் திரட்டுகின்றார். அவர்களை அனுப்பி தவறு செய்தவர்களை வெட்டி வீழ்த்த கட்டளையிடுகின்றார். அவர்களும் பாளையத்திற்குள் சுற்றிவந்து ஏறக்குறைய மூவாயிரம் பேரை வெட்டி வீழ்த்துகின்றனர். மலையடிவாரத்தில் நடந்த செயல்களுக்குக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள். லேவியர்கள் இந்தச் செயலைச் செய்ததால் அவர்கள் ஆண்டவருக்குப் பணிபுரியத் தங்களை அர்ப்பணித்துள்ளதாக மோசே கூறுகின்றார் (விப 32:29). லேவியர்களின் இச்செயல் சீனாய் உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக அவர்களை வெளிப்படுத்துகிறது. மேலும், என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது (விப 20:3) என்ற கட்டளைக்கு உண்மையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

அதன்பின் மோசே கடவுளைச் சந்திப்பதற்காக மலைக்கு ஏறிச்செல்கிறார். கடவுளை அடைந்ததும் கடவுளுக்கும் மோசேக்கும் இடையில் ஓர் உன்னதமான உரையாடல் நடக்கிறது. இந்த உரையாடல் மோசேக்கு கடவுளுடன் ஒரு நெருங்கிய உறவை உருவாக்குகிறது. கடவுள் அவரது மாட்சியை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். எரியும் புதரில் முதலில் வெளிப்படுத்திய தனது பெயரை மீண்டும் மோசேக்கு வெளிப்படுத்துகிறார் (விப 34:5). இந்தக் கடவுளின் வெளிப்பாடு மோசேயின் முகத்தோற்றத்தை ஒளிமயமாக்குகிறது (விப 34:29). பொற்கன்றுக்குட்டி நிகழ்வு மோசேக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறது.

அவர் வேண்டுதல் புரிவதோடு மட்டும் நில்லாமல் தன்னையேப் பலியாக ஒப்புக்கொடுக்கவும் ஒரு வாய்ப்பளிக்கிறது. மோசே அதைச் செய்யத் துணிகிறார். கடவுள் இஸ்ரயேல் மக்களை மன்னித்து தண்டியாமல் விடுவதற்காக தன்னையே பலியாகத் தர அவர் முன்வருகிறார் (விப 32:20-34). மக்களின் பாவங்கள்தான் மோசேக்கு இந்த வாய்ப்பைத் தருகிறது. மோசே கடவுளுக்கு நெருக்கமானவராக வந்தாலும் கடவுளின் முதுகை மட்டுமே காணும் வரம் அவருக்குக் கிடைக்கிறது (விப 33:23). இதன் பொருள் என்னவென்றால் மீட்பின் வரலாறு இன்னொரு நிறைவான நடுநிலையாளரை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. அவர் கடவுளின் முகத்தைப் பார்ப்பவராக மட்டும் இல்லாமல் கடவுளின் முகத்தைக் காட்டுபவராகவும் இருப்பார் (யோவான் 14:9) என்பதாகும். மோசேயின் வேண்டுதலும் அவர் தன்னையே கையளிக்க முன்வருதலும் கடவுளின் மனதை இளகச் செய்கிறது. கடவுள் உடன்படிக்கையை புதுப்பிக்க விரும்புகிறார் (வி 34:10-28). எனவே உடன்படிக்கை உறவு முக்கியமான விதங்களில் சீரமைப்பு செய்யப்படுகிறது. கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையில் உள்ள உறவு சீரமைக்கப்பட்டு, மீண்டும் தொடர்கிறது.

பொற்கன்றுக் குட்டியை வழிபடும் நிகழ்வு உடன்படிக்கை உறவில் சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. பொற்கன்றுக் குட்டியை வழிபடுவதற்கு முன்பிருந்த நிலையும் அதற்குப் பின் உள்ள நிலையும் வேறு வேறாக உள்ளன. முதலாவதாக, உடன்படிக்கை பெயரில் மாற்றம் ஏற்படுகிறது. பொற்கன்றுக்குட்டி வழிபாட்டிற்கு முன் உடன்படிக்கை சீனாய் உடன்படிக்கை என அழைக்கப்பட்டது. பொற்கன்றுக்குட்டி நிகழ்வுக்குப் பின் சீரமைக்கப்பட்ட உடன்படிக்கை என அழைக்கப்படுகிறது; அல்லது லேவியர் உடன்படிக்கை என்று அறியப்பட்டது. சீனாய் உடன்படிக்கை கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் நடுவில் ஏற்படுகிறது. உடன்படிக்கையை நடுநிலையாளராக நின்று செயல்படுத்தும் மோசே ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் இரத்தம் இதோ (விப 24:8) எனக் கூறி இரத்தத்தை மக்கள் மீது தெளிக்கின்றார். லேவியர் உடன்படிக்கையில் உடன்படிக்கை உறவில் மோசேயும் இணைக்கப்படுகின்றார். ஆண்டவர் மோசேயை நோக்கி, நீ இவ்வார்த்தைகளை எழுதிக் கொள். இவ்வார்த்தைகளின்படி நான் உன்னோடும் இஸ்ரயேலோடும் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளேன் என்கின்றார் (விப 34:27). சீனாய் உடன்படிக்கையில் இஸ்ரயேலின் பன்னிரு குலங்களின் தலைமகன்கள் குருக்களாகப் பணிசெய்தார்கள். லேவியர் உடன்படிக்கையில் லேவியர் வழிமரபினர் குருக்களாக பணிபுரிகின்றனர் (விப 32:29). சீனாய் உடன்படிக்கையில் உடன்படிக்கை விதிகள் சுருக்கமானவையாக, குறைவானவையாக இருந்தன (விப 20-23). லேவியர் உடன்படிக்கையில் உடன்படிக்கை விதிகள் அதிகமாக்கப்படுகின்றன. லேவியர் நூல் முழுவதும் இணைக்கப்படுகிறது (லேவி 1-27). சினாய் உடன்படிக்கையின் உடன்படிக்கை விதிகள் கடவுளின் விரல்களால் கற்பலகைகளில் எழுதப்பட்டன (விப 31:18). லேவியர் உடன்படிக்கையில் மோசே கற்பலகைகளில் எழுதுகிறார் (விப 34:28). இவ்வாறு பல வித்தியாசங்களைப் பார்க்கிறோம்.

சீனாய் உடன்படிக்கைக்குப் பின் சிறிது காலத்தில் ஏற்பட்ட பொற்கன்றுக் குட்டியை வழிபடும் நிகழ்வு உடன்படிக்கை முறிவுக்குக் காரணமாக இருக்கிறது. இந்தப் பொற்கன்றுக் குட்டியை முதல் பெற்றோரான ஆதாம் ஏவா பாவம் செய்யக் காரணமாக இருந்த நன்மை தீமை அறியும் மரத்திற்கு ஒப்பிட்டுக் கூறலாம். இரண்டு கதைகளையும் சிந்தித்தால் ஒரு சில ஒற்றுமைகளைப் பார்க்க முடிகிறது. குறிப்பாக, ஆதாமும், ஆரோனும் தவறு செய்வதற்கு தாங்கள் காரணமாக இல்லை எனக் கூறி பழியை வேறு இடத்தில் சுமத்துகிறார்கள். ஆதாம் கடவுளை நோக்கி, என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள்; நானும் உண்டேன் (தொநூ 3:12) என்கிறார். ஆரோன் மோசேயிடம் கூறும்போது, பொன் அணிந்திருப்பவர்கள் கழற்றித் தாருங்கள் என்றேன். அவர்களும் என்னிடம் தந்தனர். நான் அதனை நெருப்பில்போட, இந்தக் கன்றுக்குட்டி வெளிப்பட்டது (விப 32:24) என்கிறார். ஆதாம் கடவுளின் தலைமகன்; கடவுள் செய்யக்கூடாது என்று கட்டளையிட்ட செயலைச் செய்து கடவுளோடு உள்ள உறவை முறிக்கிறார். அதைப்போல இஸ்ரயேல் மக்களும் கடவுளின் தலைமகன் என அழைக்கப்பட்டவர்கள். பொற்கன்றுக் குட்டியை வழிபட்டதால் கடவுள் செய்த உடன்படிக்கையை மீறுகிறார்கள். கடவுளை மறுக்கிறார்கள்.

பயணம் தொடரும்...



மறையுரை வழங்குபவர்

**அருட்சகோ.ஜெரால்டின் ஸ்டீபன்**

உதவிப்பங்குத்தந்தை

**கிறிஸ்து அரசர் ஆலயம்,**

காட்டூர், கோவை.

பொதுக்காலம்

4–ஆம் ஞாயிறு

29–01–2023

முதல் வாசகம்

**செப் 2:3, 3:12–13**

இரண்டாம் வாசகம்

**1 கொரிந்தியர் 1:26–31**

நற்செய்தி வாசகம்

**மத்தேயு 5:1–12**

# ஞாயிறு மறையுரை

இறைமகன் இயேசு கிறிஸ்துவில் பிரியமுள்ள எனது அன்பு சகோதரிகளே சகோதரர்களே உங்கள் அனைவருக்கும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்திலே வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைய வாசகமானது நமக்கு குருவினுடைய முக்கியத்துவத்தையும் அவருடைய போதனையினுடைய தன்மையையும் எடுத்துக் கூறுவது போல அமைந்திருக்கிறது. இயேசு மலை மீது ஏறி அமர்ந்து என்கிற வார்த்தைகள் நற்செய்தியிலே முதல் முதலாக வருகிறது ஏன் அவர் அமர்ந்து போதிக்க வேண்டும் என்று சொல்லி பார்க்கிற பொழுது யூத ரபி தன்னுடைய சீடர்களுக்கு அதிகாரப்பூர்வமாக போதிக்கிற பொழுது அவர் உட்கார்ந்து போதிக்கிறார் என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே தான் இயேசு இங்கு அதிகாரப்பூர்வமாக அவர் அமர்ந்து போதிக்கிறார். EX CATHERA நம் திருத்தந்தை அவர்கள் ஒரு சில அதிகாரப்பூர்வமான அறிவிப்புகளை பேதுருவினுடைய இருக்கையில் அமர்ந்து அவர் இந்த உலகிற்கு அறிவிக்கிறார் என்பதை நாம் பார்க்கிறோம். இயேசுவிடம் இருந்து வருவதாக இது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. அந்த யூத ரபிக்கள் எப்பொழுது அல்லது எப்படியெல்லாம் போதிக்கிறார்கள் என்று சொல்லி பார்க்கிற பொழுது நிற்கும் பொழுது, உலா வருகிற பொழுது அவர்கள் போதிக்கிறார்கள் ஆனால் முக்கியமானதை அதிகாரப்பூர்வமாக அமர்ந்து அவர்கள் போதிப்பார்கள்.

இதுதான் அந்த யூதர்களுடைய வழக்கமாக இருக்கிறது. அடுத்ததாக திருவாய் மலர்ந்து என்று சொல்லி அவர் சொல்லிய வார்த்தைகளை இங்கு மத்தேயு சுட்டிக் காட்டுகிறார் ஏன் என்று சொல்லி பார்க்கிற பொழுது முக்கியமான வேத வாக்குகளை அவர்கள் போதிக்கிற பொழுது அந்த யூதர்கள் இப்படியாக சொல்லுவார்கள் இதயத்தை திறந்து அல்லது மனதிற்குள் இருந்து வெளிவருவது என்று சுட்டிக் காட்டப்படுகிறது. அதிலும் சிறப்பாக தமக்கு வலது கரமாக இருக்கிறவர்களுக்கு மட்டுமே இந்த முக்கியமான போதனைகளை அந்த யூத ரபிக்கள் கற்றுக் கொடுப்பார்கள் என்று சொல்லி நாம் பார்க்கிறோம். ஆகவே தான் இங்கு தன்னுடைய சீடர்களை தன் அருகிலே வரவழைத்து அவர் அங்கே போதிக்கிறார். இதயத்தை திறந்து மனதிற்குள் இருந்து அவர் முக்கியமானது கற்றுக் கொடுக்கிறார். இதில் ஏழு கருத்துக்கள் வருகின்றன. நம்முடைய வாழ்க்கையில் ஒரு சில பகுதிகளில் நாம் ஏழைகளுடைய உள்ளத்தை கொண்டிருக்க வேண்டும் என்பது முதலாவதாக இருக்கிறது பாவத்திற்காக மனம் வருத்தப்படுவதை இரண்டாவதாக சுட்டிக் காட்டுகிறார் தம்மையே தாழ்த்திக் கொள்வதை அவர் மூன்றாவதாக சுட்டிக் காட்டுகிறார் தூய்மையை நாடவேண்டும் உலக இன்பங்கள் ஒன்றும் இல்லை என்று நாம் ஒதுக்க வேண்டும் என்பதை நான்காவதாக சுட்டிக்காட்டுகிறார். உரிமையை விட்டுக் கொடுப்பவர்கள் அவர்கள் என்றுமே அழிந்து போவதில்லை அவர்கள் நிலைத்து நிற்காத என்பதை ஐந்தாவதாக சுட்டிக்காட்டுகிறார்.

கடவுளை நம்முடையவர் ஆக்கிக் கொள்வது என்பது நாம் அவருக்கு உரியவர்களாக இருக்க வேண்டும் என்பதை அவர் ஆறாவதாக சுட்டிக்காட்டுகிறார். ஏழாவதாக நீதிக்காக துன்புறுவோர் பேரு பெற்றோர் நீதியை நிலைநாட்ட நம் எல்லா காரியங்களையும் செய்ய வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டுகிறார்கள். இந்த ஏழு கருத்துக்களையும் இயேசு போதிக்கிற பொழுது ஒரு யூத ரபியை போன்று அதிகாரத்தோடு அழிக்க முடியாத ஒன்றாக என்றும் நிலைத்திருக்கக்கூடிய ஒன்றாக அவர் சுட்டிக் காட்டுகிறார். ஆக அவருடைய வலது கரங்களாக அல்லது அவருடைய சீடனாக சீடத்தையாக இருக்கிற யாவரும் இதை கடைபிடிக்க வேண்டும் என்பதற்காக அவர் சுட்டிக் காட்டுகிறார். ஆகவே இயேசுவினுடைய போதனை நம்முடைய இதயத்தில் இருந்து நம்முடைய மனதுக்குள் இருந்து வெளி வருகிறதா என்று சிந்தித்துப் பார்ப்போம். நம்முடைய உள்ளத்தில் இருந்து இயேசுவின் போதனைகளை வெளிக்கொண்டு வருகிற ஆற்றலை கேட்போம்.

– ஆமென்



# பொதுக்காலத்தின் 4-ஆம் ஞாயிறு

செப். 2:3, 3:12–13, 1 கொரி. 1:26–31, மத். 5:1–12

**29-01-2023**



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

ஆண்டவரின் கட்டளைகளை ஏற்றவராய், எளிய மனம் கொண்டோராய், இறைவனுக்கு அஞ்சி நடந்து, அவரது அன்பையும் அருளையும் பெற்று பேறு பெற்றவர்களாய் வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் பொதுக் காலத்தின் நான்காம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

அன்னை மரியாவை எலிசபெத் பேறுடையாள் என அழைத்தாள். விசுவசிக்கும் சீடரை பேறு பெற்றோர் எனச் சொல்லி ஆசீர்வதித்தார் நமதாண்டவர் இயேசு. பேறு பெற்றோர் என்பதை அவரவரின் செயல்கள்தான் தீர்மானிக்கின்றன. நாமும் நமது செயல்கள் மூலம், நல்ல சிந்தனைகள் மூலம் பேறு பெற்றவர்களாய் வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

கிறிஸ்துவினுடைய போதனையின் சுருக்கம் மலைப்பொழிவு. அந்த மலைப்பொழிவின் சுருக்கம் எட்டுப் பேறுகள். இதையே இன்றைய நற்செய்தியாக நம் தாய்த் திருச்சபை நமக்கு வழங்கியுள்ளது. நாம் மனத் தாழ்ச்சிக் கொண்டு வாழவும், இறைவன் முன்பு நம்மை நாமே தாழ்த்திக் கொண்டு வாழவும் இன்றைய நற்செய்தி அழைக்கிறது. இன்றைய வாசகங்கள் இறைவன் ஏழை எளியவரின் பக்கம் உள்ளார் என்பதையும், அவர்கள் மீது தனி அன்பு வைத்துள்ளார் என்பதையும் அறிக்கையிடுகின்றன.

கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் யாவரும் கடவுள் திருமுன் உயர்ந்தவர்கள். மனித சமூகத்தில் தகுதி இல்லாதவர்கள் எனக் கருதப்பட்ட அனைவரும் கடவுளின் பார்வையில் தகுதி உள்ளவர்கள் அவர்களே பேறு பெற்றவர்கள் என்ற சமூக நீதிக் கருத்துக்களை வழங்குகிறது இன்றைய வழிபாடு.

உயரச் செல்ல வேண்டுமா? கீழே செல்வதுதான் அதன் துவக்கம். வான்முட்டும் கோபுரம் கட்ட வேண்டுமா? அதற்கு எளிமை, பணிவு என்ற அடித்தளம்தான் ஆதாரம். நான் ஒரு பாவி என்று ஏற்றுக்கொள்ளும் ஞானத்தை பணிவுள்ளவரால் மட்டுமே பெற முடியும். அத்தகைய பணிவு கொண்டவர்களாய், ஏழையரின் உள்ளம் கொண்டோராய், பேறு பெற்ற மானிதர்களாய் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

ஆண்டவரின் கட்டளையைக் கடைப் பிடிக்க, நேர்மையை நாட, மனத்தாழ்ச்சி யோடு ஆண்டவரைத் தேடி வர, இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள் தங்களின் நம்பிக்கையை உறுதிபடுத்திக்கொள்ள செப்பானியா இறைவாக்கினர் அழைப்பு விடுக்கின்றார். எளிய மனத்தோர் பேறு பெற்றோர் என்ற ஆண்டவர் இயேசுவின் மலைப்பொழிவிற்கு முன்னோட்டமாக அமைந்துள்ள இன்றைய முதல் வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்கள், சமுதாயத்தின் அடித் தளத்தில் வாழ்பவர்கள் இவர்களையே இறைவன் தேர்ந்துகொண்டார் என்ற உண்மையை உரக்கச் சொல்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். என்னிடமுள்ள அனைத்தும் ஆண்டவர் அளித்த அருங்கொடைகள் என்பதை ஏற்று நன்றி யுடனும் மனத்தாழ்ச்சியுடனும் வாழ அழைப்பு விடுக்கும் திருத்தூதர் பவுலின் வார்த்தைகளுக்கு கவனமுடன் செவி மடுப்போம்.

## மன்றாட்டுகள்

1) எளிய மனத்தோர் பேறு பெற்றோர் என்று மொழிந்த எம் அன்பு இறைவா, உம் திருஅவையின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். உலகின் எல்லா மாந்தருக்கும் வேறுபாடின்றி எளிய மனத்துடன் பணியாற்றவும், தங்கள் நற்செய்திப் பணியின் வழியாக உலக மாந்தர் அனைவரையும் பேறு பெற்றவர்களாய் மாற்றும் ஆற்றலை யும் அவர்கள்மேல் பொழிந்திட வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

2) எம்மைப் படைத்துப் பராமரித்து வரும் அன்பு இறைவா, மாமனிதர்களாக வாழ அழைக்கப்பட்டிருக்கும் நாங்கள் ஏழைகளைப் போன்று, ஏழையரின் உள்ளம் கொண்டிருப்போரைப் போன்று உமது கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழவும் உம்மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வாழவும், எல்லாவற்றிற்கும் மேலாக தீமைகளைத் தவிர்த்து, நன்மைகளைச் செய்து பேறு பெற்றவர் களாய் வாழவும் வரமருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

3) நீதியையும், நேர்மையையும் நிலை நாட்டும் இறைவா, எம் நாட்டு தலைவர் களை நல்வழிப்படுத்தி, அவர்கள் மக்களின் நலன்களை பேணவும், நாட்டின் இயற்கை செல்வங்களைப் பாதுகாத்திடவும், சகிப்புத்தன்மை யுடனும், சமத்துவச் சிந்தனையுடனும் மக்கள் அனைவரும் ஒரே சமூகமாக சகோதரத்துவத்துடன் வாழ வேண்டிய சூழ்நிலையை அவர்கள் உருவாக்கிட வும், தீமைச் செயல்களைச் செய்யத் தயங்குபவர்களாக வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) கனிவுடையோர் பேறு பெற்றோர் என்று கூறிய எம் இறைவா, எங்கள் குடும்பங்கள் இயேசுவின் மறை உடலில் இணைந்திருக்கவும், நாங்கள் ஒருவரை ஒருவர் அன்பிலும், செபத்திலும் தாங்கிக் கொள்ளவும், துன்பங்களில் ஆறுதலாக இருக்கவும், இன்ப துன்பங்களை பெருமையோடு பகிர்ந்து கொள்ளவும், குடும்பங்களில் தியாக உணர்வுகள் நிறைந்திருக்கவும் உமது அருள்வரங்களை நிறைவாய் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# திருக்குறள் வழங்கும்
# சமூக நெறிச் சிந்தனைகள்

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



**குறள் – 30**

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.**

## குறள் விளக்கம்

எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால், அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.

## சிந்தனை

அந்தணர் என்பவர் யார்? அறச் செயல்களை செய்பவரே அந்தணர் என்று குறள் 30 கூறுகிறது. இதனையே தமிழ் விக்ஷனரி அறம் என்று முன்னோர்களால் வகுக்கப்பட்ட நீதிகளை முறைப்படி பின்பற்றுகின்றவர்கள் அந்தணர் என்று அழைக்கப்பட்டார்கள் என்கிறது.

அங்கிள் வேலி முஃபின் என்ற புகழ் பெற்ற நிறுவனத்தின் நிறுவனர் வேலி அமோஸ், எதையும் நேர்மறையாக சிந்திக்க வேண்டும் என்று எல்லோருக்கும் சொல்லிக் கொண்டிருப்பார். அவரிடம் ஒரு பத்திரிக்கையாளர் கேட்டார். நீங்கள் புகழ்பெற்ற மனிதராக இருப்பதால் தானே நேர்மறையாய் சிந்திப்பது உங்களுக்கு சாத்தியமாகிறது? என்று கேட்டார். அதற்கு வேலி அமோஸ் சொன்னார், இல்லை! நான் நேர்மறையாக சிந்திப்பதில் தான் புகழ்பெற்ற மனிதனாக இருக்கிறேன்! என்று. எண்ணங்கள் மனிதனை எப்போதும் உயர்த்துகின்றன.

பல நற்குணங்களை ஒருவர் கொண்டிருந்தாலும் சில துர்குணங்கள் தலைதூக்கினால் அவரது மதிப்பு தாழ்ந்துவிடும். நேர்மறை சிந்தனை ஒருவரை எப்போதும் மேன்மையாகவே வைக்கும் என்கிறார் அங்கிள் வேலி முஃபின்.

வளமையிலும் தாழ்மையிலும் நேர்மையாளர் ஒரே மாதிரி தான் இருப்பர். வேதாகமத்தில் ஆண்டவர் சாத்தானிடம், என் ஊழியன் யோபைப் பார்த்தாயா? அவனைப் போல் மாசற்றவனும் நேர்மையானவனும், கடவுளுக்கு அஞ்சித் தீயதை விலக்கி நடப்பவனும் மண்ணுலகில் ஒருவனுமில்லை–யோபு 2:3 என்று பெருமையாக கூறுகிறார்.

சடங்கு சம்பிரதாயங்களையும், பூசை புணஷ்காரங்களையும் விட கடவுள் விரும்புவது நேர்மையான உள்ளத்தையே என்கிறது நீதி மொழிகள். பலி செலுத்துவதைவிட நேர்மையாகவும் நியாயமாகவும் நடப்பதே ஆண்டவருக்கு உவப்பளிக்கும் – நீமொ 21:3

எச்சூழலிலும் நேர்மறையாக சிந்திப்போம் வளமையோ வறுமையோ இன்பமோ துன்பமோ நேரியவருக்கு ஒன்றுதான் என உணரும் நிலை பெறுவோம்.



சகோதரி. ரோசி. **காங்கேயம்**
புனித காணிக்கை அன்னை சபை

# சமூகமும்... சட்டமும்...

வரதட்சணை என்பது திருமணத்தின்போது பெண் வீட்டாரிடம் இருந்து மணமகன் வீட்டார் கேட்டுப்பெறும் பணம், நகை அல்லது சொத்து போன்றவைகளைக் குறிக்கும். இது சீர், செய்முறை போன்ற வேறு சில பெயர்களாலும் குறிப்பிடப்படுகிறது.

### வரதட்சணைக் கொடுமை

வரதட்சணை கொடுக்க முடியாத நிலையில் பல பெண்கள் மாப்பிள்ளை வீட்டாரின் கொடுமையால் பாதிக்கப்படும் நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த வரதட்சணைக் கொடுமையினால் பல பெண்கள் தற்கொலை செய்து கொள்தல், கொலை செய்யப்படுதல், பிறந்த வீட்டிற்குத் துரத்தப்படுதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

### வரதட்சணைசாவுகள்

ராஜ்யசபாவில; மத்திய உள்துறை இணைஅமைச்சர் அஜய் குமார் மிஸ்ரா பகிர்ந்துள்ள தரவுகளின்படி, 2017 மற்றும் 2021க்கு இடையில் நாட்டில் 35,493 வரதட்சணை மரணங்கள் பதிவாகியுள;ளன. 2017 ல் 7,466 வரதட்சணை மரணங்கள் பதிவாகியுள்ளன, 2018 ல் 7,167 , 2016 ல்- 7,1461, 2020 மற்றும் 2021ல் 6,753

### இந்தியாவில் குற்றங்கள் குறைந்துள்ளன

2021 ஆண்டு பதிவுசெய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கையில் 7.6 சதவீதம் குறைந்துள்ளது. இதன் விளைவாக, ஒருலட்சம் மக்கள் தொகைக்கு குற்ற விகிதம் 2020 இல் 487.8 இல் இருந்து 2021 இல் 445.9 ஆகக் குறைந்துள்ளது. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் கொலைகள் மற்றும் வரதட்சணை மரணங்கள் குறைந்துள்ளன.

### இந்தியஅரசின் சட்டங்கள்

வரதட்சணைக் கொடுமையை ஒழிக்க, இந்திய அரசு பல சட்டங்களை இயற்றி உள்ளது அவை:

வரதட்சணை கொடுப்பதும், அதைப் பெற்றுக் கொள்வதும் சட்டபடி குற்றமாகும். இக்குற்றத்திற்கு,10 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையுடன், ரூ.15,000க்குக் குறையாத அபராதமும் விதிக்கப்பட்டாக வேண்டும்.

வரதட்சணையை நேரிடையாகவோ, அல்லது மறைமுகமாகவோ கோரினால், 6 மாதங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனையுடன், ரூ.10,000 வரை அபராதமும் விதிக்கப்பட்டாக வேண்டும்.

வரதட்சணைச் சாவுக்குக் காரணமானவருக்கு, 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும். சில சமயங்களில், அவருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டாக வேண்டும்.

ஒரு பெண்ணின் கணவனோ, அல்லது அவள் கணவனின் உறவினரோ, அப்பெண்ணைக் கொடுமைக்கும் துன்பத்திற்கும் ஆளாக்கினால், அவருக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை, அல்லது அபராதம் விதிக்கப்பட்டாக வேண்டும்.

வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961ல், சில திருத்தங்கள் 1984 மற்றும் 1986ல் செய்யப்பட்டன. மேலும் இந்திய தண்டனை சட்டத்தில் 1983ல் 498 ஏ என்ற பிரிவு இணைக்கப்பட்டு, கணவனும், அவனது உறவினர்களும் மனைவியை உடல் ரீதியாக அல்லது மனரீதியாகக் கொடுமைப் படுத்தினால், 3 ஆண்டுகள் வரை சிறைதண்டனை என்பது அறிமுகப்படுத்தப்பட்டது. முதன் முறையாக மனரீதியான சித்ரவதை என்பது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு 1986ல், 304 பி என்ற பிரிவு வரதட்சணை சாவு குறித்துக் கொண்டு வரப்பட்டது. திருமணமாகி 7 ஆண்டுகளுக்குள் பெண் சந்தேகமான சூழலில் இறந்தால், இறப்பதற்கு முற்பட்ட காலத்தில் வரதட்சணை கொடுமைகள் நடந்திருந்தால், அது வரதட்சணை மரணம் என்றுதான் பதிவுசெய்யப்படும். கொடுமை செய்த கணவனும், அவர் உறவினர்களும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு, வழக்குப்பதிவு செய்யப்படும். குற்றச்சாட்டு உண்மையல்ல என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் தான் நிரூபிக்கவேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்டால் 7 ஆண்டுமுதல் ஆயுள் தண்டனைவரை கிடைக்கும். அறிவியல் விரோதமாக ஸ்டவ் வெடித்து மருமகள் மட்டும் சாகிற பிரச்னைக்கு இவ்வாறாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. மரண வாக்குமூலத்துக்கு மாஜிஸ்திரேட் வரவேண்டும் என்ற அவசியமில்லை, மருத்துவரே போதும் என்ற விதி அறிமுகப்படுத்தப்பட்டது. 2005ல் வந்த குடும்ப வன்முறைதடுப்புச் சட்டமும் வரதட்சணையைக் குற்றமாக்குகிறது. 1961 சட்டத்தில் திருமணத்துக்காக கொடுக்கப்படுவதே வரதட்சணை என்று இருந்தது, 1984ல் திருமணம் தொடர்பாக என்று மாற்றப்பட்டது.

### மகளிர் காவல் நிலையங்கள்

தமிழ்நாட்டில் இது போன்ற வரதட்சணைக் குற்றங்களைத் தடுக்கவும், பெண்களுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளைக் குறைக்கவும் மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்காவல் நிலையங்களில் ஆய்வாளர், உதவிஆய்வாளர் மற்றும் காவலர்கள் போன்ற பணிகளில் பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



திருப்பலி வாசகங்கள்

# பொதுக்காலம் 4–ஆம் வாரம்

**29.01.2023 முதல் 05.02.2023**

**29.01.2023 – பொதுக்காலம் 4ம் வாரம் ஞாயிறு**

முதல் வாசகம் : செப்பனியா 2:3–3:12–13

இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 1:26–31

நற்செய்தி : மத்தேயு 5:1–12அ

**30.01.2023 – திங்கள் கிழமை**

முதல் வாசகம் : எபிரேயர் 11:32–40

நற்செய்தி : மாற்கு 5:1–20

**31.01.2023 – செவ்வாய்க் கிழமை**

முதல் வாசகம் : எபிரேயர் 12:1–4

நற்செய்தி : மாற்கு 5:21–43

**01.02.2023 – புதன்கிழமை**

முதல் வாசகம் : எபிரேயர் 12:4–7, 11–15

நற்செய்தி : மாற்கு 6:1–6

**02.02.2023 – வியாழக்கிழமை**

**ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா**

முதல் வாசகம் : மலாக்கி 3:1–4 (அ) எபிரேயர் 2:14–18

இரண்டாம் வாசகம் : லூக்கா 2:22–40

**03.02.2023 – வெள்ளிக்கிழமை**

முதல் வாசகம் : எபிரேயர் 13:1–8

நற்செய்தி : மாற்கு 6:14–20

**04.02.2023 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : எபிரேயர் 13:15–17, 20–21

நற்செய்தி : மாற்கு 5:30–34

**05.02.2023 – பொதுக்காலம் 5–ம் வாரம் ஞாயிறு**

முதல் வாசகம் : எசாயா 58:7–10

இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 2:1–5

நற்செய்தி : மத்தேயு 5:13–16



Let us remember the past with gratitude, live the present with enthusiasm, and look forward to the future with confidence.

- Pope John Paul II -

நலம் தரும்

# இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்

கோபிச்செட்டிபாளையம்.

உறவுகளே இனிய வணக்கம். இன்றைய நலக்கல்வி..!

## மஞ்சள்காமாலை முதல் மலட்டுத்தன்மை வரை போக்கும் கீழாநெல்லி!

நமது கால்களுக்குக் கீழ் வளர்ந்தாலும் நம் தலையைக் காக்கக்கூடிய மூலிகைகள் பல உண்டு. எந்தவித பராமரிப்பும் இல்லாமல் தானாகவே வளர்வதால் எண்ணற்ற மருத்துவக் குணங்களைக் கொண்ட அவற்றை நாம் கண்டு கொள்வதில்லை. சின்ன உடல் நல பாதிப்பு என்றால்கூட மருத்துவர்களிடம் ஓடிச்செல்லும் பழக்கம்தான் நம்மிடம் உள்ளது.

மிகப் பெரிய நோய்களைக்கூட வீட்டில் இருந்தபடியே எளிதாகச் சரிசெய்யக்கூடிய மூலிகைகள் உண்டு. அப்படி ஓர் அற்புதமான மூலிகைக் கீரைதான் கீழாநெல்லி.

இதற்கு கீழ்க்காய் நெல்லி கீழ்வாய் நெல்லி என்ற வேறு பெயர்களும் உண்டு. இது குறுஞ்செடி வகையைச் சார்ந்தது. நீர்நிலைகள், வயல் வரப்புகள் மற்றும் பாழ் நிலங்களில் வளரக்கூடியது. இதனுடைய இலைகள் புளியமரத்தின் இலைகளைப் போலவே இரண்டு வரிசைகளில் சிறியதாகக் காணப்படும். இதன் இலைகளுக்குக் கீழே பூக்களும் காய்களும் அழகாக வரிசைகட்டி நிற்கும்.

கீழாநெல்லியின் இலைகளில் பில்லாந்தின் என்னும் மூலப்பொருள் இருப்பதால் இதன் இலைகளில் கசப்புச்சுவை மிகுதியாக இருக்கும். பொட்டாசியம் சத்து அதிகமாகக் காணப்படும் தாவரங்களில் கீழாநெல்லியும் ஒன்று. இலைகளுக்குக் கீழே நெல்லிக்காயின் சிறிய வடிவமாக இதன் காய்கள் இருப்பதால்தான் இதை கீழாநெல்லி என்று அழைக்கிறார்கள்.

பல்வேறு மருத்துவக் குணங்களைக் கொண்டது. கீழாநெல்லியின் மருத்துவக் குணங்கள்:

மஞ்சள் காமாலை நோயைச் சரிசெய்யும். மஞ்சள் காமாலைக்கு மிகச்சிறந்த மருந்து கீழாநெல்லியே. இதற்கு சிறுநீரைப் பெருக்கும் சக்தி உண்டு. கண் சம்பந்தமான நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கும். தீராத தலைவலியைத் தீர்க்கும் வல்லமை கீழாநெல்லிக்கு உண்டு. இது கல்லீரல் சம்பந்தமான நோய்களைக்கூடச் சரிசெய்யும்.

சொறி, சிரங்கு போன்ற பிணிகளைப் போக்கும் உடல் சூட்டால் உண்டான கட்டிகள், வீக்கங்கள் ஆகியவற்றைக் கரைக்கும். ரத்தசோகையைச் சரிசெய்யும் . கல்லீரல் பாதிப்புகளைத் தடுக்கும். மலட்டுத் தன்மையைப் போக்கும்.

சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்தும் சக்தி கீழாநெல்லிக்கு உண்டு. சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும். கூந்தல் சம்பந்தமான பிரச்னைகளிலிருந்து நம்மை விடுவிக்கும். கீழாநெல்லியை எடுத்துக்கொள்ளும் முறை:

மஞ்சள் காமாலை : கீழாநெல்லி இலையைப் பறித்து நன்றாக சுத்தம் செய்ய வேண்டும். சுத்தமான இலையை நன்றாக அரைத்துக்கொள்ள வேண்டும். இதனுடன் எலுமிச்சைப் பழச்சாறு மற்றும் மோருடன் கலந்து குடித்து வந்தால் மஞ்சள் காமாலை குணமாகும்.

மேலும் ஹெப்படைட்டிஸ் பி மற்றும் சி ஆல் உண்டாகும் கல்லீரல் பாதிப்புகளிலிருந்து நம்மைக் காக்கும்.

சர்க்கரை நோய் : உலர்ந்த கீழாநெல்லிப் பொடியை மூன்று வேளையும் உணவுக்கு முன்பாக எடுத்துக்கொண்டால் சர்க்கரை நோய் கட்டுக்குள் வரும்.

சிறுநீரகம் மற்றும் கல்லீரல் பாதிப்புக்களைத் தடுத்து டயாலிஸிஸ் செய்வதிலிருந்து நம்மைக் காக்கும்.

உடற்சூடு மற்றும் தொற்றுநோய்கள் : கீழாநெல்லியின் வேரை நன்றாக அரைத்து பசும்பாலுடன் கலந்து மூன்று வேளையும் குடித்துவந்தால்

உடல் குளிர்ச்சி அடையும். தொற்று நோய்கள் நெருங்காது.

வயிற்றுப்புண் : 1 டம்ளர் மோரில் கைப்பிடி அளவு அரைத்த கீழாநெல்லி இலையைக் கலந்து காலையில் குடித்துவர

வயிற்றுப்புண் மற்றும் வயிறு சம்பந்தமான அத்தனை பிரச்னைகளும் தீரும்.

தலைவலி : நல்லெண்ணெய் இரண்டு டீஸ்பூன் கீழாநெல்லி வேர் சீரகம் மற்றும் பசும்பால் ஆகியவற்றை நன்றாக அரைத்து வடிகட்டி அந்தச் சாற்றைக் குடித்தால் தலைவலி குணமடையும்.

சொறி, சிரங்கு : கீழாநெல்லி இலையுடன் உப்புச் சேர்த்து அரைத்து குளித்து வந்தால் சொறிஇ சிரங்கு ஆகிய நோய்கள் சரியாகும்.

வெள்ளைப்படுதல் : கையளவு கீழாநெல்லி இலையை நன்றாக நசுக்கிக்கொள்ள வேண்டும். பின்னர்இ அதை மூன்று டம்ளர் நீரில் சேர்த்து ஒரு டம்ளர் நீராக வரும் அளவுக்குச் சுண்டக் காய்ச்ச வேண்டும்.

இதை காலை மாலை என இரு வேளைகளிலும் குடித்துவர வெள்ளைப்படுதல் நோய் குணமடையும். இயற்கை நோய்களைப் போக்கும் அதிஅற்புதமான மூலிகைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இயற்கை நமக்களித்த மூலிகைகளை நாம் சரியாகப் பயன்படுத்தி, நோய் நொடி இல்லாமல் வாழ்வோம்.

நன்றி உறவுகளே... என்றும் உங்கள் அன்பு சகோதரன்

**ஜே. அன்புரோஸ்**

நலநெறியாளன்

தொடர்பு எண் : 9360456063